என் மறைவிடம் என் கேடகம்

You Are My Hiding Place and Shield

Album 31 Song 3

என் மறைவிடம் என் கேடகம்

DATE 07/06/2007 — 119 சங்கீதம் – சாமெக் (113-120)

என் மறைவிடம் என் கேடகம் நீர்தான் கர்த்தரே
என் பிழைப்பு என் நம்பிக்கை நீர்தான் கர்த்தரே
என் உடம்பு சிலிர்த்து பயப்படுவது உமக்குத்தான் கர்த்தரே
என்னை ஆதரிப்பதும் என்னை இரட்சிப்பதும் நீர்தான் கர்த்தரே

வீணான சிந்தனைகளை நான் வெறுத்து
உமது வேதத்தில் பிரியப்படுகிறேன்
என் மறைவிடம் என் கேடகம் நீர்தான் கர்த்தரே
உம்முடைய வசனத்திற்காக காத்திருக்கிறேன்
(என் மறைவிடம்)

பொல்லாத மனுஷரை என்னைவிட்டு நீக்கி
உமது கற்பனைகளை கைக்கொள்கிறேன்
என் பிழைப்பு என் நம்பிக்கை நீர்தான் கர்த்தரே
உம்முடைய வார்த்தையின்படி என்னை ஆதரியும்
(என் மறைவிடம்)

பூமியிலுள்ள துன்மார்க்கரை களிமண்போல் அகற்றி
என்னை உமது சாட்சியால் பிரியப்படுத்துகிறீர்
என் உடம்பு சிலிர்த்து பயப்படுவது உமக்குத்தான் கர்த்தரே
உம்முடைய நியாயத்தீர்ப்புக்கு பயப்படுகிறேன்
(என் மறைவிடம்)

என் பிராணனை வாங்கத்தேடும் பகைஞரை மிதித்து
எக்காலமும் உம் பிரமாணங்களை நோக்கச்செய்கிறீர்
என்னை ஆதரிப்பதும் என்னை இரட்சிப்பதும் நீர்தான் கர்த்தரே
உம்முடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பேன்
(என் மறைவிடம்)



கடவுளின் கேடயம்

இயேசு கிறிஸ்து - பாதுகாவல்